DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 324/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரியப்பன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஆறுமுகம் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 23.07.2025.

முதல் விசாரணை

1. நான் தாராபுரம் ரோடு மின் நகரில் வசித்து வருகிறேன். லதாங்கி தியேட்டர் அருகில் திருப்பதி என்ற பெயரில் ஜவுளி கடை வைத்துள்ளேன் வீட்டில் நான் என் மனைவி மகள் மற்றும் மறுமகன் வசித்து வருகிறோம். 20.01.2025 ம் தேதி நாங்கள் திருப்பூர் சொந்த வீட்டிற்கு குடும்பத்துடன் சென்ற விட்டோம் . 21.01.2025 ம் தேதி திருடு போய்விட்டதாக 22 ம் தேதி மாலை 6.00 மணிக்கு எனது மனைவிக்கு போன் மூலம் ரித்திஸ், அசோக் ஆகியோர் தகவல் சொன்னார்கள். நான் மட்டும் உடனடியாக கிளம்பி இரவு 8.00 மணிக்கு உடுமலையில் உள்ள வீட்டிற்கு வந்தேன்.
2. பக்கத்து வீட்டில் சுமதி என்ற போலிசார் இருந்தார். அவர் தகவல் சொன்னார். முன் கதவு உடைககப்பட்டிருநத்து. நான் வீட்டிற்குள் சென்று பார்த்த போது பீரோ உடைத்து துணிகள் சிதறி கிடந்தது. என் வீட்டில் 8 கிராம் தங்க காயின்–1 மற்றும் 2 கிராம் மோதிரம் திருடு போயிருந்தது. என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் அசா.ஆ.1 என

குறியீடு செய்யப்படுறிது. புகாரை பெற்று கொண்ட போலிசார் உடனடியாக விசாரிப்பதாக சொன்னார்கள். அதன் பின்னர் காவல் நிலையத்திலிருந்து எனக்கு போன் வந்தது. திருடு போன நகை வந்து விட்டது என்றும், அதை கனம் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து பெற்றுகொள்ளுமாறும் சொன்னார்கள். எனக்கு வழககறிஞர் வைக்க வசதி இல்லாததால் மனு போடவில்லை. இந்த வழக்கிற்காக சாட்சி சொல்ல அழைப்பாணை பெற்று கடந்த 21.07.2025 ம்தேதி வந்த போது கனம் நீதிமன்றத்தில் மனு கொடுத்து நகைகளை பெற்று கொண்டேன். பெற்று கொண்ட நகைகள் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் தங்க காயின் –1 அசாபொ.1 என்றும் குறியீடு செய்யப்படுகிறது. தங்க காயின் குறியீடு செய்யப்பட்ட பின் மனுதாரர் வசம் ஒப்படைக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் புகைப்டத்தில் உள்ள தங்க காயின் தான் எனது நகை. புகை ப்படம் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது. திருடுபோன மோதிரம் கிடைக்கவில்லை என்று போலிசார் தெரிவித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. புகார் நீங்கள் எழுதவில்லை என்றால் எனக்கு கை நடுக்கம் இருப்பதால் என் மாப்பிள்ளை புகார் எழுதினார். இந்த புகார் உங்கள் மாப்பிள்ளை எழுதியதாகவும் அதில் நான் கையெழுத்தும் செய்ததாகவும் புகாரில் வாசகங்கள் இல்லை என்றால் ஆமாம் நகை காணாமல் போனதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான பில்கள் காவல்துறையிலோ நீதிமன்றத்திலோ ஒப்படைத்தீர்களா என்றால் இல்லை காயின் மற்றும் மோதிரம் எத்தனை ஆண்டுகள் பழமையானது என்றால் காயின் இந்த ஆண்டு ஜனவரி மாதம் வாங்கியது. மோதிரம் பழையது.
2. புகாரில் என்ன மாதிரியான காயின் என்பது பற்றி சொல்லவில்லை என்றால் எட்டு கிராம் தங்க காயின் என சொல்லியுள்ளேன் லட்சுமி காயினா அல்லது குபேரக் காயினா என்று சொல்லவில்லையா என்றால் இல்லை. உங்களுடைய காயின் எந்த காயின் என்று தெரியாது என்றால் இதே காயின் தான். இந்த காயின் உங்களது காயின் அல்ல என்றாலும் போலீசார் கொடுத்தது என்றாலும் இல்லை. உங்கள் வீடு இருக்கும் ஏரியா வீடுகளில் நெருக்கம் உள்ள ஏரியா என்றால் எதிர்புறம் வீடு இல்லை உங்கள் வீட்டு அருகில் லைன் வீடு உள்ளது என்றால் ஆமாம். அந்த லைன் வீட்டில் நடுவில் தான் உங்கள் வீடு உள்ளது என்றால் ஆமாம். கதவுகள் உடைக்கப்பட்டதாக சொல்லியுள்ள நிலையில். அருகில்

உள்ளவர்களுக்கு சத்தம் கேட்கும் என்றால் இரவு நேரம் என்பதால் கேட்கவில்லை. உங்கள் கடையில் எத்தனை பேர் வேலை செய்து வருகிறார் என்றால் ஒரு நபர் தான் சிறிய கடை தான், கடையில் வேலையாள் இருந்தாரா என்றால் கடை நோம்பி என்பதால் லீவு. நீங்கள் வெளியூர் செல்வது பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு தெரியும் என்றாலும் சரிதான் பக்கத்து வீட்டில் பிசி சுமதி என்பவர் உள்ளார்

3. வீடடின் டோர் மரத்தலான டோர் என்றாலும் பூட்டு எந்த விதமான பூட்டு என்றாலும் அனைத்தும் ஹெவியானது. கதவை உடைக்காமல் லாக்மட்டும் உடைந்துள்ளது என்றால் கதவில் சிறிய சிறிய காயஙகள் இருந்தது. 2-3 பேர் சேர்ந்து தான் செய்ய இயலும் என்றால்அதைப் பற்றி எனக்கு தெரியாது.
4. சாட்சிகள் பட்டியலில் உள்ள சுபா எனது மனைவி, கோபாலகிருஷ்ணன் எனது மாப்பிள்ளை, கவிதா என்பவர் பக்கத்து வீட்டுக்காரர், அசோக் பக்கத்து வீட்டுக்காரர், நிதிஷ் ராகுல் அருகில் இருப்பவர் கார்த்திக் அதே லைனில் இருப்பவர். நீங்கள் புகார் உடனடியாக கொடுக்கவில்லை என்றால 22 ம் தேதி இரவு தெரிந்து 23 ம் தேதி புகார் கொடுத்தேன். புகார் கொடுப்பதற்கு முன் போலிசார் வந்து வீட்டை பாரத்து விட்ட சென்றாரகள் என்றால் ஆமாம் வீட்டை பார்த்து எழுதி விட்டு சென்றார்கள். அதன் பின்னிட்டு போலிசார் வரவில்லை என்றால் 2-3 முறை வந்தார்கள்.அதற்கு பின்னிட்டு காவல் துறை சம்பந்தப்பட்டடவர்கள் விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். நீதிமன்றத்தில் இருந்து பெற்ற சென்ற பொருள் உங்களுடைய பொருள் அல்ல என்றும் புதியதாக வாங்கி இருந்தால் அதற்கான பில்லை தாக்கல் செய்துள்ளீர் தாக்கல் செய்திருப்பீர்கள் என்றாலும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல சீட்டு போட்டு வாங்கினேன் ,எனது மகளின் நோம்பிக்காக வாங்கியது.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakal B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 324/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோகுல கிருஷ்ணன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 23.07.2025.

<u>முதல் விசாரணை</u>

1. நான் மின் நகரில் வசித்து வருகிறேன். உடுமலை லதாங்கி தியேட்டர் அருகில் திருப்பதி பெயரில் ஜவுளி கடை வைத்துள்ளோம். அசா.1 எனது மாமனார் ஆவார். 20.01.2025 ம்தேதியன்று நான் என் மாமானார் மாமியார் மற்றும என் மனைவி ஆகியோருடன் திருப்பூருக்கு சொந்த வீட்டிற்கு சென்றோம். 22.05.2025 ம்தேதி மாலை 7.00 மணிக்கு என் மாமியாருக்கு பக்கத்து வீட்டுகாரர் கவிதா என்பவர் போன் செய்து உங்கள் வீட்டில் லைட் எரிவதாகவும் நீங்கள் வந்து விட்டிர்களா என்று கேட்டதற்கு நாங்கள் வர வில்லை என்று சொன்னோம். எங்கள் வீடு திறந்து கிடப்பதாக சொன்னார்கள். தகவல் கிடைத்து எனது மாமனார் வந்தார். நான் மறுநாள் வந்தேன். என் மாமனாரிடம் விசாரித்த போது 8 கிராம் தங்க காயின் –1 மற்றும் தங்க மோதிரம் திருடுபோனதாக சொன்னார். எழுத்து மூலமான புகாரை மாமனார் சொல்ல சொல்ல நான் எழுதி கொடு்த்தேன். அதில் மாமனார் கையொப்பம செய்தார். என்னிடம் காட்டப்படும் அசா.ஆ.1 புகார் நான் எழுதியது தான்.

போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. மாமனார் வீட்டை சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றால் ஆமாம். நீங்கள ஊருக்கு போன விவரம் பக்கத்து வீட்டில் தெரியும் என்றால எனது அத்தை சொல்லியிருப்பார். நீங்கள் எந்த தேதியில் எப்போது வந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் என்னை போலிசார் விசாரிக்கவில்லை. புகார் நீங்கள் எழுதவில்லை என்றால் மாமனார் சொல்ல சொல்ல நான் தான் எழுதினேன். அதில் நகைகள் காணாமல் போன நகை எப்போது வாங்கினார்கள் என்று தெரியாது என்றால் ஆமாம் மாமனாருக்கு தான் தெரியும் வாங்கிய பின் என்னிடம் சொன்னார்கள். வாங்கி எவ்வளவு காலம் இருக்கும் என்றால் ஜனவரி மாதம் வாங்கியது. புகார் கொடுத்த சமயத்தில் நகையின் பில்கள் கொடுக்கவில்லை என்றால் மாமனாரிடம் தான் கேட்க வேண்டும். மாரியப்பன் உங்கள் மாமனார் என்பதாலும் சொன்ன மாதிரி சொன்ன இடத்தில் நிங்கள் இல்லை என்றாலும் போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால்சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakal B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 324/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.3 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அசோக் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சீனிவாசன் | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலுக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 23.07.2025.

முதல் விசாரணை

நான் தாராபுரம் ரோட்டில் ஸ்ரீ வாரி எக்ஸ்டென்சன் குடியிருப்பு பகுதியில் வசித்து வருகிறேன். சென்னையில் உள்ள பேப்பர் மில்லில் மார்கெட்டிங்க் வேலை செய்து வருகிறேன். 13 வருடமாக இந்த வேலை செய்து வருகிறேன். சம்பவ நடந்த இடத்திற்கு இடதுபுறமாக எங்கள் வீடு உள்ளது. நகை காணாமல் போய் விட்டதாக கூறினார்கள். 22.01.2025 ம் தேதி மாலை சம்பவநடந்த வீட்டிற்கு வலது புறமாக ரித்திஷ் மற்றும் அவரது அம்மா கவிதா இருவரும் வந்து எங்களிடம் இந்த வீட்டில் லைட் போட்டிப்பதாக சொன்னார்கள். நான் அவர்கள் ஊருக்கு போனதாக சொன்னேன். அவர்கள் இன்னும் வரவில்லை என்றுஅவர்கள் வீடடின் காம்பவுண்ட் முன்பாக நின்று பார்த்த போது கதவு திறந்திருந்தது. உடனே அவர்களுக்கு தகவல் சொன்னோம். உள்ளே சென்று பார்த்த போது பீரோ உடைக்கப்பட்டிருந்தது. 15 நிமிடத்தில் அசா.1 கடையில் இருந்து வீட்டிற்கு வந்து விட்டார். 23.01.2025 ம் தேதி போலிசார் அங்கு வந்த வரைபடம் வரைந்தார்கள். அதற்கு ஆதரவாக சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டடப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது

தான். பார்வை மகசர் அசா.ஆ.3 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. போலிசார விசாரணையில் எதேர்ச்சையாக வந்ததாகவும் அப்போது போலிசார் அந்த வழியாக வந்ததாகவும் மாரியப்பன் என்பவரது வீட்டில் திருடு போயிருந்ததாக நிறைய பேர் கூட்டமாக இருந்ததாக அருகில் வந்த போது பார்வை மகசரில் கையெழுத்து போட்டதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. நீங்கள் மதியம் கையெழுத்து செய்ததாக சொல்லி உள்ள நிலையில் அப்பொழுது நீங்கள் வேலைக்கு சென்று இருந்தீர்கள் என்றாலும் நீங்கள் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தீர்கள் என்றாலும் இல்லை
2. அதில் என்ன எழுதி இருக்கிறார்கள் என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் படித்து பார்த்து தான் கையொப்பம் போட்டேன். சொன்ன மாதிரி போலீசார் அங்கு வரவில்லை என்றாலும் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் அசா.1 மாரியப்பன் உங்களது வீட்டுக்கு அருகில் வசிப்பவர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கு நாங்கள் அனுசரணையாக பொய்யாக சாட்சியமளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakal B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.